

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 12.05.2026


# முதல் மாற்றம் தமிழுக்கு அவமானம்!

முதல் நாளிலேயே தமிழ்த் தாயின் முகத்தில் கரியைப் பூசியுள்ளனர்!

ஆட்சி அமைக்கும் பெரும்பான்மையை பெறாத த.வெ.க.என்ற கட்சி, தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் தயவில் ஆட்சியை அமைத்துள்ளது. தனிப் பெரும்பான்மை இல்லாத கட்சி அரசின் முதலமைச்சராக விஜய் பொறுப்பேற்றுள்ளார். முதல் கோணல் முற்றும் கோணல் என்பதைப் போலவே, பதவியேற்பு விழாவிலேயே அவர் நடத்தப் போகும் ஆட்சியின் இலட்சணம் பல் இளித்துவிட்டது.

**பதவியேற்பு விழாவின் தொடக்கத்தில் வந்தே மாதரம் பாடப்பட்டுள்ளது. அதன் பிறகு தேசிய கீதம் பாடப்பட்டுள்ளது. மூன்றாவதாக தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டுள்ளது. தமிழை மூன்றாவது இடத்துக்குத் தள்ளி வைத்து தனது பதவியேற்பு விழாவை நடத்தி இருக்கிறார் விஜய். ஆளுநரின் அஜெண்டாவுக்கு விஜய் தலையாட்டி இருக்கிறார்.**

அரசு விழாவின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தும், விழாவின் முடிவில் தேசிய கீதமும் பாடுவதுதான் தமிழ்நாட்டின் சட்டம். அந்தச் சட்டத்தை மீறி இருக்கிறது த.வெ.க. ஆட்சி.

**மனோன்மணியம் தீட்டிய சுந்தரனார் (1855-1897) எழுதிய 'நீராரும்' பாடலைத் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக அரை நூற்றாண்டுக்கு முன் அரசாணையாக ஆக்கினார் தலைவர் கலைஞர். அந்தப் பாடலை தமிழ்நாட்டு மாநிலப் பாடலாக அரசாணை வெளியிட்டார் திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.**

தமிழ்த்தாயை வாழ்த்துவது என்பது ஒரு சடங்கு - சம்பிரதாயமாக அல்ல உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் செய்யப்பட வேண்டியது என்று நினைத்து இன்னொரு அரசாணையையும் திராவிட மாடல் ஆட்சி வெளியிட்டது. தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை இசைத்தட்டு மூலமாக ஒலிப்பதை விட - உரிய பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு பாட வேண்டும் என்பதுதான் அந்த உத்தரவு.

**ஆளுநர் ஆர்.என்.ரவிக்கும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குமான மோதலே தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுக்காகத்தான் வந்தது. நிகழ்ச்சியின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை பாடக் கூடாது, தேசிய கீதம்தான் பாட வேண்டும் என்று அடம் பிடித்தார் ரவி. அதனை இறுதி வரை மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்கவில்லை. இதற்காகவே சட்டமன்றத்தில் உரையை வாசிக்காமல் போனார் ரவி. இதுபோன்ற கடந்த கால அரசியல் செயல்பாடுகள் எதையும் அறியாமல், மக்குத் தனமாக ஆளுநர் மாளிகைக்குத் தலையாட்டி இருக்கிறது புதிய அரசு.**

**தமிழ்நாடு அரசு பதவி ஏற்பு விழாவில் 'வந்தேமாதரம்' பாடலுக்கு முதலிடம் வழங்கி, தமிழை மூன்றாம் நிலையில் வைத்தது மரபை மீறிய செயல். சட்டத்தை மீறிய செயல். தமிழை மீறிய செயல். தமிழை அவமானப்படுத்தும் செயல். த.வெ.க. ஆட்சியை ஆதரிக்கும் கட்சிகளும் இந்தச் செயலை கடுமையாகக் கண்டித்துள்ளார்கள்.**

மேற்கு வங்கத்தில் பா.ஜ.க. ஆட்சி பதவியேற்கும் போது கூட அங்கு 'வந்தே மாதரம்' ஒலிக்கவில்லை. அது பா.ஜ.க. அரசு. அங்கேயே 'வந்தே மாதரம்' இல்லை. தமிழ்நாட்டில் எதற்காக ஒலிக்க வேண்டும்? 'வந்தே மாதரம்' எழுதியவர் வங்கத்துக்காரர். அவர்கள் மாநிலத்திலேயே அது ஒலிக்கவில்லை. தமிழ்நாட்டில் எதற்காக ஒலிக்க வேண்டும்? இதை முதலமைச்சர் விஜய்க்கு யாராவது சொன்னார்களா?

'வந்தேமாதரம்' பாடல் மதச்சார்பற்ற பாடல் இல்லை என்பதால் அது தேசிய கீதமாக இருக்க முடியாது என விடுதலை இயக்கக் காலத்திலேயே தீர்மானிக்கப் பட்டது. அண்ணல் காந்தியடிகள் 'வந்தே மாதரம்' பாடலை ஏற்பதற்கு மறுத்து விட்டார். 1937இல் காங்கிரஸ், இப்பாடலில் இடம் பெற்ற இஸ்லாமிய எதிர்ப்புக் கருத்துகளை ஏற்க மறுத்து விட்டது. தேசிய கீதமாக்க முடியாது என்று கூறி விட்டது.

முஸ்லிம் மன்னர்கள் ஆட்சியை ஆயுதம் தாங்கிய போர் மூலம் ஒழித்து விட்டு, இந்து - ஆங்கிலேய ஆட்சியை உருவாக்க இந்துக்கள் ஆயுதம் ஏந்த வேண்டும் என்பதே நாவலின் மையமான கருத்து. சத்யானந்தா என்ற கதை நாயகன், இந்து இளைஞர்களைத் திரட்டும்போது, அந்த கதாநாயகன் பாடும் பாடலே 'வந்தே மாதரம்'. ஆங்கிலேயர்களை அரவணைத்து, இசுலாமியர்களை வெறுக்கும் கருத்துகளைக் கொண்டது தான் அந்த நூல். அதனால்தான் 'வந்தே மாதரம்' பாடல் பா.ஜ.க.வுக்கு இனிக்கிறது.

பிரதமர் மோடி அரசு 'வந்தே மாதரம்' பாடலைப் பாட வேண்டும் என கட்டாயப்படுத்தியது. இது தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு நாடாளுமன்றத்தில் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா அவர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க உரையை ஆற்றினார்.

**"இந்து - இசுலாமியர் பிரிவினைக்கு வித்திடுவது இந்தப் பாடல். இந்தப் பாடலை இசுலாமியர் பாடக்கூடாது என்று சொல்லப்பட்டது. சுதேசிய இயக்கத்தில் இசுலாமியருக்கு இடமில்லை என்று உறுதி செய்யப்பட்டது. அந்த நூல் இசுலாமியர்களுக்கு எரிச்சல் ஊட்டுவதாகவே உள்ளது என்று நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் சொல்லி இருக்கிறார். வந்தே மாதரம் பாடல் இசுலாமியர்களை காயப்படுத்துவதாக இருக்கிறது என்று சொன்னவர் தாகூர். பாடலின் சில பத்திகளில் கவிதை அழகும் நயமும் தெரிந்தாலும் அதை பொது இடங்களில் நிகழ்ச்சிகளில் பயன்படுத்துவதை அனுமதிக்க முடியாது என்றார் தாகூர். இப்பாடலை பயன்படுத்தக் கூடாது என்று இறுதி முடிவெடுத்தவர் அண்ணல் காந்தி. இசுலாமியர்களை இரண்டாம் தர குடிமக்களாக்கி இந்த தேசத்தை இந்து ராஷ்டிரம் என்று அறிவிப்பதுதான் மோடியின் கனவு"** என்று பேசினார் ஆ.ராசா. இந்த அரசியல் அடிப்படை அறிவு ஏதுமில்லாமல் 'வந்தே மாதரத்துக்கு' தலையாட்டி இருக்கிறது த.வெ.க. ஆட்சி.

**தமிழ்த்தாய் வாழ்த்தை மூன்றாவது இடத்துக்குத் தள்ளிய தமிழுக்கு இழைக்கப்பட்ட அவமானம். 'வந்தே மாதரம்' பாடலை அனுமதித்தது மத நல்லிணக்கத்துக்கு எதிரானது ஆகும். முதல் நாளில் இரண்டு மாபெரும் பிழைகளைச் செய்துள்ளது த.வெ.க. அரசு.**

●●

## ஹார்முஸ் நீரிணை அருகே படகு தீப்பிடித்து இந்திய மாலுமி பலி!

புதுடெல்லி, மே 12-

ஹார்முஸ் நீரிணை அருகே படகு தீப்பிடித்ததில் இந்திய மாலுமி உயிரிழந்தார். மேலும் படகில் இருந்த 18 ஊழியர்கள் மீட்கப்பட்டனர். பாரசீக வளைகுடாவையும் ஓமன் வளைகுடாவையும் இணைக்கும் ஒரு முக்கிய கடல்வழிப் போக்குவரத்துக்கு முக்கியமானது ஹார்முஸ் ஜலசந்தியாகும். உலகின் எண்ணெய் விநியோகத்தில் கணிசமான பங்கு இந்த பகுதி வழியாகவே செல்கிறது. ஈரான் மற்றும் அமெரிக்காவிற்கு இடையேயான போருக்கு பின் தற்போது தற்காலிக போர் நிறுத்தம் அமலில் உள்ளது.

ஈரானிய துறைமுகங்களைப் பயன்படுத்தும் மற்றும் ஈரானிய எண்ணெய் ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்கு ஹார்முஸ் ஜலசந்தி வழியாகச் செல்ல அமெரிக்கா தடை விதித்துள்ளது. இந்த நிலையில் ஹார்முஸ் ஜலசந்திக்கு அருகே ஒரு படகு நேற்று முன்தினம் தீப்பிடித்தது. இதில், இந்திய மாலுமி ஒருவர் உயிரிழந்தார். 4 பேர் படுகாயமடைந்தனர். அந்தப் படகில் இருந்த 18 இந்திய மாலுமிகளை, அவ்வழியாகச் சென்றுகொண்டிருந்த ஒரு கப்பல் மீட்டுள்ளது.

தீ விபத்திற்கான காரணம் தெரியவில்லை. தகவல்களின் படி, காயமடைந்த மாலுமிகள் துபாயில் மருத்துவ சிகிச்சை பெற்று வருகின்றனர். துபாயில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம், எக்ஸ் தளத்தில் வெளியிட்ட ஒரு பதிவில், தங்கள் அதிகாரிகள் மீட்கப்பட்ட இந்திய மாலுமிகளைச் சந்தித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. மேலும் படகு உரிமையாளருடன் தொடர்பில் இருப்பதோடு, சாத்தியமான அனைத்து உதவிகளையும் செய்து வருகிறோம் என கூறியுள்ளது.

# தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம்!

கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் **தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம்** 07-05-2026 மாலை 5.30 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில்

தி.மு.க. சட்டமன்றக் கட்சியின் தலைவராக

திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்களும்,



துணைத் தலைவராக

திரு. **கே.என்.நேரு** அவர்களும்,



கொறடாவாக

திரு. **எ.வ.வேலு** அவர்களும்



தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 10-05-2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## தமிழ் மொழியை அவமதிக்கும் வகையில் – முதல்வர் பதவியேற்பு விழாவில்

# தமிழ்த்தாய் வாழ்த்தை மூன்றாவதாகப் பாடுவதா?

## திராவிட இயக்கத் தமிழர் பேரவை கடும் கண்டனம்!

சென்னை, மே 12-

சென்னையில் நேற்று முன்தினம் (10.05.202) நடைபெற்ற, திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில், கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:



பக்கிம் சந்திர சாட்டர்ஜி எழுதிய 'ஆனந்த மடம்' நாவலில் இடம் பெற்றுள்ள இஸ்லாமியர்களுக்கு எதிரான வந்தே மாதரம் பாடலை இன்று நடைபெற்ற முதலமைச்சர் பதவி ஏற்பு விழாவில் முதலாவதாகவும், தமிழ்த்தாய் வாழ்த்தினை மூன்றாவதாகவும் பாடியுள்ளனர்.

இஸ்லாமிய மக்களுக்கு எதிராகவும் தமிழ் மொழியை அவமதிக்கும் வகையிலும் நடைபெற்றுள்ள இந்நிகழ்வை, பேரவை கடுமையாகக் கண்டிக்கிறது!

தமிழ்நாடு அரசின் நிதி நிலை குறித்து ஏற்கனவே வெளிப்படையாக கடந்த அரசு தெரிவித்திருக்க, பல வாக்குறுதிகளை அன்று அள்ளிக் கொடுத்துவிட்டு, தமிழ்நாடு அரசின் நிதி நிலையைச் சரிபார்த்த பின்புதான் அவற்றை நிறைவேற்ற முடியும் என்று புதிதாகப் பொறுப்பேற்றுள்ள தமிழ்நாட்டின் முதலமைச்சர் இன்று அறிவித்திருப்பது மக்களை ஏமாற்றுவதாக உள்ளது. இப்போக்கினை மாற்றிக் கொண்டு கொடுத்த வாக்குறுதிகளை தமிழ்நாடு அரசு நிறைவேற்றிட வேண்டும் என்று பேரவை வலியுறுத்துகின்றது!

'பி எம் ஸ்ரீ' என்ற பெயரில் இந்தியைத் திணிக்கும் ஒன்றிய பாஜக அரசின் சூழ்ச்சியை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதோடு, தமிழ்நாடு அரசு எந்தச் சூழலிலும் 'பி எம் ஸ்ரீ' திட்டத்தை ஏற்கக்கூடாது எனவும் இக்கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைவர் சுப.வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

## எதிர்க்கட்சித் தலைவராக பொறுப்பேற்றுள்ள

# உதயநிதி ஸ்டாலினுக்கு ஜவாஹிருல்லா வாழ்த்து!

சென்னை, மே 12 -

எதிர்க்கட்சித் தலைவராக பொறுப்பேற்றுள்ள உதயநிதி ஸ்டாலினுக்கு மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்;

தமிழ்நாடு சட்டப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவராக பொறுப்பேற்றுள்ள உதயநிதி ஸ்டாலினுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இளைஞர்களின் எதிர்பார்ப்புகளையும், தமிழ்நாட்டின் ஜனநாயக மற்றும் சமூகநீதி அரசியலின் மரபையும் பிரதிபலிக்கும் வகையில் அவர் இந்த



பொறுப்பை சிறப்பாக நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவுகிறது. மிக முக்கியமானதொரு காலத்தில் அவர் இப்பொறுப்பை ஏற்றுள்ளார்.

சட்டப்பேரவையில் மக்களின் குரலாக செயல்பட்டு, ஆளும் அரசின் தவறுகளை சுட்டிக்காட்டி, பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு வலுவான குரல் கொடுப்பார் என்பது உறுதி. திராவிட இயத்தின் கொள்கைகள், சமூகநீதி, மாநில உரிமைகள் மற்றும் மதச்சார்பற்ற ஜனநாயகப் பண்புகளை உறுதியாக முன்னெடுத்து செல்லும் எதிர்க்கட்சித் தலைமையை அவர் வழங்குவார் எனவும் நம்புகிறேன். அவரது புதிய பொறுப்பில் சிறப்பாக செயல்பட்டு தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக தொடர்ந்து பாடுபட வாழ்த்துகிறேன் என்று கூறினார்.

## ஆட்சி மாறிய முதல் நாளே த.வெ.க.வினர் அராஜகம்! திருச்செங்கோடு வடக்கு

# ஒன்றியச் செயலாளர் வட்டூர் ஜி.தங்கவேல் வீடு புகுந்து தாக்குதல்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி கண்டனம்: இன்று ஆர்ப்பாட்டம்!

நாமக்கல், மே 12 -

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: -



நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு வடக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளராக செயல்பட்டு வருபவர் வட்டூர் ஜி.தங்கவேல். இவர் வட்டூர் தண்ணீர் பந்தல்பாளையம் பகுதியில் வசித்து வருகிறார்.

இந்நிலையில் அதே பகுதியைச் சேர்ந்த தவெக நிர்வாகிகளான தங்கராசு, கந்தசாமி மற்றும் திருச்செங்கோடு பகுதியைச் சேர்ந்த அஜித் ஆகிய மூவர், நேற்று முன்தினம் (10.05.2026 - ஞாயிற்றுக்கிழமை) இரவு சுமார் 10 மணியளவில் நடந்து முடிந்த தேர்தல் பணி முன்விரோதம் காரணமாக திருச்செங்கோடு வடக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் வட்டூர் ஜி.தங்கவேல் வீட்டிற்குச் சென்று தகாத வார்த்தைகளால் பேசி, பின்னர் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தி உள்ளனர்.

படுகாயம் அடைந்த நிலையில் வட்டூர் ஜி.தங்கவேல் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்த தாக்குதலில் வட்டூர் ஜி.தங்கவேலுவிடமிருந்த செல்போனும் ரூ.2,000 பணமும் பறித்து சென்று உள்ளனர்.

நேற்று முன்தினம், தவெக தலைவர் ஜோசப் விஜய் முதலமைச்சராக பதவியேற்ற அதே நாளில், அவரது கட்சியினர் வீடு புகுந்து தாக்குதல் நடத்தி அராஜகத்தில் ஈடுபட்டிருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

அரசியல் வெறியுடன் செயல்பட்ட இந்த சம்பவத்தில் தொடர்புடைய தங்கராசு, கந்தசாமி, அஜித் ஆகியோர்மீது கடும் நடவடிக்கை எடுத்து கைது செய்ய வேண்டும் என கே.எஸ்.மூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் இத்தாக்குதலை கண்டித்தும், தாக்குதலில் ஈடுபட்டவர்களை கைது செய்யாததைக் கண்டித்தும் இன்று (12.05.2026-செவ்வாய்க்கிழமை) காலை 10 மணிக்கு திருச்செங்கோடு அண்ணா சிலை அருகில் நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப் பாட்டம் நடைபெற உள்ளது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர்ச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்டோர் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார்.